திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட குட்டிமேய்க்கன்பட்டி கிராமத்தில் நல்ல சாலை வசதி, குடிதண்ணீர் வசதிகளுடன்கூடிய கால்நடை தரிசு நிலங்கள் சுமார் 68 ஏக்கரும், அதன் அருகிலுள்ள சின்னாலந்தங்குளம் ஊராட்சியில் 28 ஏக்கர் அரசு கால்நடை தரிசு நிலமும் உள்ளது. அதனால் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற நல்ல அரசு, அந்த இடத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பு இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள்தான் இருந்தன. மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த பிறகுதான் ஒரே நேரத்திலே இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகளை நம்முடைய மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு அமைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வரும் காலத்திலே புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முடிவெடுக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பகுதியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

42—

தள்ளுபடி மானியம்

***8470—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 பிப்ரவரி 20]

(அ) சேலம் சரக நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு தள்ளுபடி மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-10

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் சரகத்திற்கு கைத்தறி மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு சங்ககிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, சேலம் சரகத்தில் உள்ள 64 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 29,000 நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் கைத்தறித் துணி விற்பனையின் மீது 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.11.78 கோடியும், 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.11.46 கோடியும், 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.9.25 கோடியும், 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.5.81 கோடியும், ஆக மொத்தம் ரூ.38.30 கோடி அளவிற்குத் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், தமிழக மக்களின் தானைத் தலைவி, மக்களின் முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நெசவாளர்கள் கஷ்டப்படாமல் நெசவுத் தொழில் செய்ய பெடல் தறிகளை முழு மானியத்துடன் நெசவாளர்களுக்கு வழங்க ஆணையிட்டுள்ளார்கள். சென்ற ஆண்டு வழங்கியதைப்போல் இந்த ஆண்டும், சேலம் சரகத்திற்குக் கூடுதலாக பெடல் தறிகளை முழு மானியத்துடன் வழங்கவும், பள்ளி மாணவிகளுக்கு துப்பட்டா உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு வழங்கும் 40 ஆம் நெம்பர் சிட்டா நூலுக்குப் பதிலாக கோன் நூல் வழங்கவும் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதே நேரத்தில் ஏற்கெனவே நம்முடைய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை சேலம் சரக நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தள்ளுபடி மானியம் வழங்கிய தொகையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று அவையில் அறிவித்தார்கள். அதற்காக மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 90 சதவிகிதம் அரசு மானியமாகவும், 10 சதவிகிதம் நெசவாளர்களுடைய பங்களிப்பாகவும் வைத்து, ஒவ்வொரு வருடமும் 2,000, பெடல் தறிகள் என்ற வகையிலே அளிக்கப்பட்டு வந்த நிலையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மூன்று ஆண்டுகளிலே 6,000 பெடல் தறிகளையும் விலையில்லாமல் முழு செலவையும் தமிழக அரசே ஏற்றுக்கொண்டு வழங்கக்கூடிய திட்டத்தை அறிவித்தார்கள். அதன் மூலமாக தற்போது மூன்று ஆண்டுகளிலே 6,000 தறிகளை வழங்க வேண்டிய நிலையில் 2,000 நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், தற்போது உற்பத்தி நிலையில் இருக்கும், மீதமுள்ள 4,000 பெடல் தறிகளும் மிக விரைவிலேயே வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சேலத்திலே உள்ள நெசவாளர்கள் வைத்துள்ள கோரிக்கையின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போல, துப்பட்டா உற்பத்தியிலே இந்த முறை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்திலேதான் 4 செட் யூனிஃபார்ம்கள் வழங்க வேண்டும் என்றும், அதற்கு மூன்று துறைகள்—அந்தச் சீருடைகளைப் பள்ளிக் கல்வித் துறை மூலமாக வழங்க வேண்டும்; அவற்றைத் தைப்பதற்காக, பெண்களுக்கு சமூக

2015 பிப்ரவரி 20]

நலத் துறை மூலமாக வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் அந்தத் துணிகளை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பினை கைத்தறித் துறைக்கும் வழங்கவேண்டும்—பணியாற்ற ஆணை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துப்பட்டா உற்பத்திக்கு கோன் நூல் வழங்க வேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார். தற்போது விருதுநகர் மாவட்டத்திலே இரண்டு தினங்களுக்கு முன்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியதிலே அவர்கள் கோன் நூல் வேண்டாம் என்றும், அதனைத் தவிர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளார்கள். இருப்பினும் அனைவருடைய கருத்தையும் கேட்டு, அவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி அவரவர் வசதிக்கேற்ப நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

முற்பகல் 11-15

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும் வகையில், நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட பெடல் தறிமூலம் பொதுமக்களுக்கு வழங்கும் இலவச வேட்டி உற்பத்தி செய்யும் திட்டம் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த முறை கேள்வி எழுப்பிய நேரத்திலே, அவர்கள் இலவசம் என்று ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவசம் என்ற வார்த்தையே இருக்கக்கூடாது, விலையில்லாத பொருட்கள் மக்களுக்கு என்று சொன்ன காரணத்தினால், இலவசம் என்பதை விலையில்லாத வேட்டி, சேலைகள் என்று திருத்தம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 20

மக்கள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசுத் திட்டங்களின் மூலமாகவே இன்றைக்கு நெசவாளர்களுக்குத் தொடர்ச்சியாக வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கின்றது. அரசு, மக்களுக்கு வழங்கக்கூடிய விலையில்லாத வேட்டி, சேலைகள் திட்டத்தின் மூலமாக, முதல் நிலையாக கைத்தறி நெசவாளர்களுக்கும், அதற்கு அடுத்தாற்போல பெடல் தறி நெசவாளர்களுக்கும், அதற்கடுத்து அவர்களுக்குப் போக, மீதம் உள்ளவற்றை விசைத்தறி நெசவாளர்களுக்கும் வழங்கக்கூடிய நிலை இருக்கின்றது. அதற்கடுத்தாற்போல், அந்தப் பணிகள் முடிந்தவுடனேயே பள்ளிச் சீருடை உற்பத்திச் செய்யக்கூடிய பணிகள் வழங்கப்படுகின்றன. அவையும் போக, நெசவாளர்களுக்கு மற்ற உற்பத்திகளையும் அவர்கள் செய்ய வேண்டும். பொருளாதாரத்திலே அவர்கள் மேம்பட வேண்டுமென்பதற்காகவே பயிற்சி நிலையங்களும் ஆங்காங்கே நடத்தப்பட்டு, பல்வேறு வகையான துணிகளை அவர்கள் தயார் செய்ய பயில வேண்டுமென்ற நிலையும் உருவாக்கப்பட்டுள்ளது. எவ்வளவு அரசுத் திட்டங்கள் இருக்கின்றனவோ அந்த அளவிலே முழுமையாக 19 மாவட்டங்களிலே இன்றைக்கு கைத்தறி, விசைத்தறி நெசவுகள் இருக்கின்றன. அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அதுபோக, மீதமுள்ள நேரத்தில் மற்ற வகைகளையும் அவர்கள் உற்பத்தி செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பல்வேறு நிலைகளிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு இடங்களிலே உள்ள நிலை மாறி, பல்வேறு மாவட்டங்களிலே வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். சங்கரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள்கூட துணைப் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கக்கூடிய அரசு, ஆயத்த நடவடிக்கையிலே இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசுத் திட்டங்கள் மூலமாக வழங்கக்கூடிய அத்தனை துணி வகைகள் காரணமாக இன்று நெசவாளர்கள் தங்கள் வாழ்க்கையிலே மிகுந்த பொருளாதார மேம்பாடு அடைந்து வருகின்றார்கள் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.